உ

சிவமயம்.

ஸ்ரீ சற்குருசகாயம்

# குருவணக்க மணிமாலை.

இஃது

புலியூர்ஸ்வாமிகள் உத்திரவுப்படி

கீழ்வேளூர்

## அ. அருணாஜல முதலியாரால்



திருவாரூர்

"நீலலோசனி பிராஞ்சு" அச்சுயந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1912.

OFFICE ... 11 JUL 1912 MADRAS

Q23:417
N12
(48571)

294.551



45
294
OFFICE OF THE ... REGISTERED 11 JUL 1912 MADRAS

உ

சிவமயம்.

சிவ குரு தேவ நம:

# குருவணக்க மணிமாலை.

காப்பு.

ஓங்கார மெய்ப்பொருளா யுள்ளறிவி னுட்புகுந்தென்
ஆங்காரம் நீங்கவருள் செய்து—நீங்காத
போதப்பொருட் குருவைவாழ்த்த வருட்போதகமாம்
நாதப்பிரணவமேகாப்பு.

திருச்சிற்றம்பலம்.

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பேதேனே
ஆரமுதே யென்கண்ணே அரியதான
பொருளனைத்தும் தரும்போத கற்பகமே
பூரணமாய் ஒளிநிறைந் தெவ்வுயிர்கள்தோறும்
பிரிவறநின் றிருவினைகட்கீடாய்ப் போகம்
புசிப்பிக்கப் பொறிபுலனுய்ப் பொருந்தப்போதம்
வருமளவும் அருவாய்நின் றளித்துக்காத்த
அருட்குருவே யுன்னடிகளடைந் துய்ந்தேனே 1.

உய்யுநெறி யெதுவோவென் றறியாதிவ்
வுலகனைத்தும் புகுந்து பார்த்தும்
பொய்யுலகம் மெய்யெனவே மயங்கியுழல்
பேதையேன்றன் புன்மை யோர்ந்து
நையுமனத்துடன்மேனி காட்டியாண்ட
நலங்கொள்குருமணியே நிற்செய்தியெல்லாம்
மெய்விரவும் அருளோடு மேவுதற்கேயாதலா
லென்வினையிரு தீர்த்துன்னடியில் சேர்த்திடாயே. 2.

14857



தீராத வினைகளெல்லாம் தீர்த்துத்தெய்வத்
  திருவருளே கண்ணாகக் கண்டொன்றேயாய்
தாஆரவின்ப வெள்ளம் பெருகஎன்றும்
  ஆனந்தவாரி தியில்முழுகி நின்றும்
பேராத நிலைவேண்டும் முக்திவேண்டும்
  பேச்சற்ற நிலைவேண்டும் பேரின்பத்தால்
ஆராதமன நாசமடையவேண்டும்
  அண்ணலே அருட்குருவேயடிக் கீழ்வைப்பாய் 3.

நானென்னும் அகங்காரம் நீக்கி நித்தம்
  நன்னெறிகள் என்னுள்ளம் சேர்த்தியென்றும்
மானன்னவிழியுடை யார்மையல் நீக்கி
  மாளாதபற்றனைத்தும் தீர்த்தாட்கொண்டு
கோனென்னவந்து திருக்கோலங்காட்டி
  குரைகழலிற்சேர்த் தென்னை யாளவேண்டும்
தானன்றி வேறு பொருளில்லை யென்று
  சாற்றியசற்குருவே நின்சரணன் சேர்ந்தேனே. 4.

ஆரணங்கள் தேர்ந்தறியா திரங்க என்றும்
  அன்பரி தயத்திருந்துள்ளமுத மூறும்
பூரணமெய்ப்புனித அருள்நிறைவேபோதம்
  புதுமலராய் அர்ச்சிக்கத்துலங்கித்தோன்றும்
காரணமே திருமேனியாகக் காட்டிக்
  கலந்த திருவடியாலென் கவலைதீர்த்துப்
பேரணங்காம் பிறவியை நீத்தருட்கண்செய்த
  பேரொளியே நின்னருள்சேர்ந்துய்ந்தேன்நானே. 5.

ஒருவாத பிறவியினைத்தீர்த்தோங்காரத்
  துள்ளிருத்தி ஒளிமயமாய் உலகமெங்கும்
பிரியாதபூரணமாய்ப் பேரானந்தப்
  பெருவெள்ளம் திளைத்தருந்திப் பேரின்பத்தில்

பிரியாதமுறை செய்துபேதாபேதம்
　　பிரிவின்றி நினதருளில் திளைத்துவாழக்
குருவாகிவந்த அருட்குன்றே நின்றன்
　　குரைகழலிலிருத்தி யென்றன்குறை தீர்த்தாள்வாய் 6.

கோதிலாத்தெள்ளமுதே குறைதீர்த்தாளும்
　　குருமணியே சிவமணியே அருளேயென்றன்
தீதெலாமறிவித்துத் தூய்மைசெய்து
　　திருவருளைத்தெரிவித்த தெளிவேயின்னும்
தீதுலாமலமாயை சூழாவண்ணம் சிற்சபையில்
　　நடந்தெரிந்து தெளிந்தவின்பம்
பேதியாதென்னிதயத் தென்றும் நீங்காப்
　　பேரின்பத்திருத்தி யருட்குருவே காப்பாய். 7.

O23;417 N12

வேறு.

ஆதாரமாறினுக்கும் அருவுருவாய் அன்பாய்
　　அறிபவர்க்கோரானந்த அருளுருவாய்த் தோன்றிப்
பூதாதிபுவனமெல்லாம் படைத்தளித்துமறைத்து
　　புகுந்தொடுக்கிப் பரபோகம் துய்ப்பிக்கப்புரந்து
வேதாதி நால்வர்களாய் அருவுருவாய் அருவாய்
　　விளங்குமுனதருட் பெருமை யாரறிவாரரசே
பாதாதிமுடிதெரியாப் பரப்பிரமவடிவே
　　பாலித்தகருணை யென்மேல் பதித்தல் கடன்குருவே. 8.

வேறு.

பதித்ததிருவருளி தயந்தன்னைவிட்டுப்பேராமல்
　　பாழ்மனமாயைகள் சேராமல்
கொதித்தகொடுங் கோபம்கோள் கொலைகளவுகாமம்
　　குருநிந்தையாதி வினையுளம் மேவாமல்
மதித்தலத்தில் பழையவினைமல் காதுன்றன்
　　மலர்க்கணருள் ஞேக்காலே யெரித்து நீக்கி
துதித்தடியி லொருபோழ்தும் நீங்காப்போகம்
　　துய்ப்பிப்பாய் தூமணியே குருவேகோவே. 9.

அறியாதபருவத் தென்னறிவினுள்ளே
அடியார் போலணைந் துதிருமன்றினுள்ள
குறியாதும் குறைவின்றிக்காட்டி யெற்கோர்
கூற்றுலென் குறையனைத்தும் தீர்த்தாட்கொண்டு
பிறியாது பக்குவம் பார்த்தறிவினுள்ளே
அறிவாகித்தெரிவித்துத் தேர்ந்தபின்பு
குறியாகித் திருவுருவம் காட்டியாட்கொள் .
கோதற்றகுருமணியே குறைதீர்த்தாள்வாய். 10.

வேறு.

சிவமேசிற்றம் பலத்திலொளிமயமாம்
அருவுருவச் செயலைக்காண
நவமேவந்தருட் கோலங்காட்டிஉனை
நினைப்பித்த நிமலாநன்மை
தவமேதுமறியாத காலத்தே
தண்கருணையுருவாகித் தயவாலாண்டாய்
அவமே நாள்கழிவதுவோ
அண்ணலே அருட்குருவே அடிக்கீழ்வைப்பாய் 11.

ஆகாத பருவத்திலறிவினுள் ளேயணைந்து
திருவம்பலத்தின் பெருமைகாண
வாகாதல வென்றுகூவி நின்றாரருள்
வாய்மொழியா லகன்று
போகாதுபின் வருவாயென்றழைத்த
வான்கருணை யயர்த்தாயோ நீ
ஆகாத காதரசே அயர்ந்தேன்நான்
அருட்குருவே அடிக்கீழ் வைப்பாய் 12.

அம்பலத்திற் கோலங்கொண் டருளுருவாயாண்ட
அண்ணலே யென்றயர்ந்தேன் அமுதமூறும்
அம்பலத்திலிருந்தி ஓங்குமோங்கார ஒளியுருவாய்
அகம்புறமும் ஒன்றாய் நீங்கா

தம்பரத்திற் பரபோகம் துய்ப்பித்துக்கழல்
சேர்க்கா தின்றளவும் தாழ்த்ததென்னோ
அம்பலத்தாய் நின்னுளவை யறிவேனோ நான்
அண்ணலே அருட்குருவே யடிக்கீழ்வைப்பாய் 13

புண்ணியனே புண்ணியத்தின் வடிவே
ஞானகுருவாகிவந்து திருக்கோலங் காட்டி
நண்ணியனே நல்வினை தீவினையின்போகம்
நயந்தறிந்து நீங்கவழி காட்டிநின்ற
கண்ணியனே கைதவமொன் றறியேன்காவாய்
காப்பதினித் தாழ்த்திடலு மாகாதென்றன்
புண்ணியமே பூரணமே புல்லறிவேன் செய்த
புன்மையொழித் திரங்கியருட் பூங்கழலில் வைப்பாய் 14

வேறு

புன்னெறியிற் செல்கின்ற போக்கதனை நீக்கி
பூங்கழலிற் சேர்க்கவொரு கண்ணருளாம் கல்லால்
பின்னெறிந்து முன்னணைந்து முகம்மலர்ந்த நகையால்
முழுவினையும் நீக்கியருள்வாய் முத்தமுதிர்ந்து
பின்னணைவா யென்னவரும் பேயனேற்குன்றன்
பிரசமலர்தந்து நீங்காப்பிறவி யினையறுத்து
நன்னெறியால் விளங்கவரு மென்றமணிவிளக்கே
நீள்நாள்கள் கழிவதுவோ நிறைமலர்த்தாளிருத்தே 15

பாதகங்கள் செய்திடினும் பரிவாகக்கொண்டு
பாழ்வினைகளாம்மாயை பதியவிடா திதயத்
தாதரவாலியமாதி யோகக்காட்சிக் கப்பாலாய்
அருள்மயமாய் வெளியாய் நீங்காப்
போதகமாய்ப் பொறிபுலன்கள் காணாப்போகம்
புசிப்பிக்கும் பூரணமாய் புகலாய் நின்ற
பாதகமலத்திருத்திப் பவங்கெடுத்துப்
பாலித்தகருணை யருட்குருவே வைப்பாய் 16

வேறு

நீதியுள நினதருளிற்றிளைக்க வெண்ணி
நின்மலயோகத்தை நிதம்கூடவந்தால்
பாதியிலே மனமாதிபாழ்த்த கன்மம்
பதியவிடா தெதிர்த்தடர்த்துப் பரந்தஞான
ஓதியையும் நீக்கியுணர்வழித்துநிற்ப
துன்கருணையறியாதோ யுறவேயுன்றன்
பாதகமலத்திருத்திப் பரபோகத்தைப்
பாலித்துப் பணிகொள்வாய் பரப்பிரம குருவே 17

ஆதியுமாய் அநாதியுமாய் அறிவதனுக்கெட்டா
அன்புருவாய் இன்புருவாய் அருவடிவாய் நீங்காச்
சோதியுமாய் நீதியுமாய் நின்மலமாயகலா
நிறைமதியாய் நீர்நிலனாய் அழல்கால்வானாய்
பாதலமாய்ப் பல்லுயிராய்ப் பனிப்பகையாய்ப்பலவாய்ப்
பாதாதி முடிதெரியாப் பரஞ்சுடரா யருளாய்
வேதாதி முதல்வர்களாய் விளங்கவரும் குருவே
வேதித்த வினைதீர்த்துன் விரைமலர்த் தாளிருத்தே 18

தோடகலாநெஞ்சத் திருவினையா லடர்ந்துவரும்
கேடறியேன் கேடகலக் கூறுமவர்சீர்பாதம்
சூடறியேன் சூட்டிவினை தீர்த்திடவுமறியேன்
சுழல்காற்றி லலைகின்ற சருகதுபோலானேன்
பாடகமெல்லியர்கள் மயல்தீர்க்க வழியறியேன்
பாழ்த்தபிறவிப் பகையைப்போக்க அறிவேனோ
பாடகரைப் பற்றறுத்துப் பதத்திருத்தும் குருவே
பாதகங்கள் நீக்கியெனைப் பணியாக்கிக்கொள்வாய் 19

வேறு.

ஆசாதிபகைகளாம் பெண்டீர் மகவாதியோர்
வாசனையில் நின்றிடாது

நேசானுபூதியாம் ஞேபத்திலெஞ் ஞான்றும்
நீங்காதிருக்கும் நிலையை
வாசாமகோசர நிராமய புராதன
வரம்பற்ற மோனநிலையைத்
தாசானுகூலாம் பரமசை தன்னியமே
சுத்தசகள மயயானகுருவே 20.

என்றுநின்னருட்கருணை யெளியன்மேல் வைப்பதென்
றேங்கித் தியங்கும் நெஞ்சம்
கன்றகன்று புலியின்வாய்ப் படுந்தன்மைபோல்
காலனார்க் காளாகவோ
கன்றினைநினைந்தழு தெதிர்த்தருள் செய்தாயெனக்
கருணைவடிவான குருவே
கமலபதமீந்துனது கருணைமழை பெய்தெனைக்
காப்பதுன் கடமை குருவே 21.

பாராதிபுவனப் பரப்பெலா மாகியே
பாலினுறு நெய் போலவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமில்லாமல்
பரந்தொளி நிறைந்த அருளே
பாராமல் நினதருளிற் சேராமல் வாழுவது
நீதியோக கருணை வடிவே
பார்த்துனது கழலிணைகள் சேர்த்தெனது கர்மங்கள்
போக்குவதுன் கடமை குருவே 22.

எள்ளளவுநெஞ்சமுந் தின்கருணைவெள்ளத்தில்
என்னிதயம் நிற்கவிலையே
தள்ளரியமனமாகும் கல்லைக்கரைக்கவோர்
தந்திரம்செய்வ தரிதோ
கள்ளப்புலன்பொறிகள் வழியடக்கிக்கழல்
காட்டலரிதோ கருணையே

தெள்ளமுதேதெளிவி னுள்ளமேதீவினைகள்
 தீர்த்துனடிமேல் வைகுருவே 23.

எய்தரிய மனிதப் பிறப்பெடுத்தும் நின்ன
 தெழில் மலர்ப்பாதம் நினையேன்
பொய்யெனப் பூமிபொன் தாரம்மகவாதிவினை
 மீட்கவும் வழியறிகிலேன்
நையுமன தோடடியில் நின்றுனருள் வெள்ளம்
 திளைத்துப் பிறப்பறுவனோ
செய்தவம் சிறிதுமில்லே னருட்சோதியே
 சின்மயாநந்தகுருவே 24.

(வேறு)

ஒருகோடிபிறவி யெடுத்துழல்கோடி
 யோனிபல புகுந்துவாடி
அருகோடியாசை யெனும்திரைகள்
 பலகோடி எதிர்தாக்கச்சென்று
முருகோடு மலர்க்குழலார் மயல்கோடிமாளா
 துன்னருளாம் பாதத்
தருகோடி வரக்குருவே பலகோடிபிறவி
 களைந்தருளில் வைப்பாய் 25.

வேறு

ஒருவாத பிறப்பறுத்துள் மலமாயைநீக்கி
 ஓவாதவான்கருணை யுளத்திலினிதிருத்த
ஒருவாத நியதிகலை காலமொழிவித்தை
 உள்ளிதயத் திருத்தியென துள்ளறிவையெழுப்பி
ஒருவாத தத்துவங்கள் உடலுயிர்கள் உணர்வித்
 துலகிலுள பல்போகப் பெருமாயைதவிர்த்து
ஒருவாதென் னுளந்தனில் நின்றுணர்வித்த அருவே
 ஓவாதுன்னடி மலரில்ஒன்றவைபாய் குருவே 26.

600 008.
14851

பாலித்த பற்றகற்றிப் பாதத்திலிருத்திப்
பார்க்குமிடமெங்குமொளி மாறாத அரு
பாலித்துப் பாசவிருட் பற்றனைத்தும் நீக்கி
பரந்துலகிலலைந்துவரும் பாழ்பிறவிநீக்கி
பாலித்த சிவமாதி தத்துவங்களாகிப்
பரபோகமாகி யருள்பழுத்த பழச்சுவையே
பாலித்தசிற்சபையில் அருள்நடம்செய்யுருவே
பரபோகம் துய்ப்பித்தென் பாலிருத்தாய்குவே. 27.

பாற்கடலில் வாழ்கின்ற பருமீன்களதனைப்
பசிதீரப்பருகாது பாங்கொர் சிறுசெந்தின்
பாற்சென்று தின்றுதிரிந்தரும்பசியைத்தீராப்
பான்மையைப்போல் அகம்புறம் முன்னருள்ஒளியாய்சூ
பாற்கடலைப் படிந்தருந்திப் பவப்பிணியைத்தீர்த்துப் [ழும்
பரபோகத்தினிதிருக்கும் பண்பறியேன்பதியே
பாற்கடலில் வருமமுத மனையதொருவடிவே
பாலமுத பதமிருத்திப் பணிகொள் குருவடிவே. 28.

பாலித்த அருள்வடிவின் பாலிருத்தியென்னைப்
பரபோகம்புசிப்பித்துப் பவங்கெடுத்தலரிதோ
மால்நித்தம் கொடுக்கும் இருட்கேவலத்திலிருந்து
மயங்காமல் தனுகரண போகாதிகொடுத்துப்
பாலித்த புவனமதில் பலகோடியுயிராம்
பயிர்விளைத்து மலமறுத்துப் பாசவிருள் துரந்து
பாலித்துப் பரபதத்தில் பணியாக்கிவைத்தல்
பதிப்பொருளாம் நினதுபணி பரப்பிரமகுருவே. 29.

ஆசையெனும் கடற்றிரைகள் அடுக்கடுக்காயெதிர்க்க
அறிவழிந்து பொறிகலங்கி அகமெலிந்து சலிக்கப்
பாசமெனும் புதல்வர்பொருள் மனையாதியடர்க்கப்
பரிசழிந்து பரந்திரந்து பரிதவித்துத்திரியப்
பாசமொடு கடைமுறைநாள் யமன்தூதர்கையில்
படுமுயிர்கள் பரிபவம்போல் பாரிலுழலாமல்
பாசவினைக் கட்டறுத்துப் பரபதத்திலிருத்திப்
பவங்கெடுத்துப் பணிகொள்ளென் பரப்பிரமகுருவே. 30

ஆங்காரக் கொடும்பகையை அடியோடுகளைந்தன்
 றணைந்தகொடுங் கோபமுளை முடியோடு சாய்த்து
நீங்காத பற்றனைத்தும் களையாகப்பிடுங்கி
 நினைப்பதற்குமுடியாத மனக்குன்றையுடைத்து
ஓங்காரப்பொருளுருவாய் உள்ளுணர்வாய் உயிராய்
 ஓங்குமொளி உருவாகி உள்கலந்தசிவமாய்
ஓங்காரப் பேரொளியம் பலத்தாடுமருவே
 ஓங்காரத்திருத்தி அருள்ஒன்றவைப்பாய் குருவே. 31.

ஒளியுடைச் சிற்றம்பலத்தில் ஓங்காரவடிவாய்
 உள்ளறிவைச் சேர்த்திருக்க நீங்காதபுகலாய்
வழியிரண்டும் நிற்கநடுவெளியில் ஒருவெளியாய்
 வாட்கண்களிரண்டிற்கும நடுவாகுமொளியாய்க்
களிபுலன்கள் காணுதகாட்சிக்கப்பாலாய்க்
 கண்டுயிர்கள் அமுதுண்ணும் கற்பகப்பூமலராய்
ஒளியுடைய திருவருளிலொன்றியுவந்திருப்ப
 ஓவாதவான்கருணை யுள்ளிருத்தாய்குருவே. 32.

நாதத்தின் வடிவாகும் நற்சிலம்பைக்கழலில்
 நாட்டியருள் நடம்புரியும் நாடகத்தின்செயலே
நாதத்திலுருவாகி நான்மறைகளாகி
 நாபியடிமுதலொளிகள் வாக்காதிநாலாய்
நாதத்திலுருவாகித் தத்துவங்களாகி
 நாமஉலகினிலுயிர்கள் நல்வினையருத்தி
நாதத்திலிருத்தி நறுமலரடியைநல்கும்
 நாதாந்தகுருமணி யுன்னடிநிழலில் வைப்பாய். 33.

சிற்சத்திகாண அருள்திருநடத்தின் செயலே
 சிற்சபையிலருளாகித் தெரிவித்ததெளிவே
சித்தாகிஉயிர்களிருட் பூட்டறுக்கஎண்ணிச்
 சிற்சத்தியாகி சுத்தமாயைகுணவடிவாய்ச்
சித்தாயஒலியாதி தத்துவங்களாகிச்
 சித்ததனிற் சடத்திலருமயமாகித் தாங்கிச்
சித்தாகி உயிர்கள் சிவனடி சேர்த்தி அருளும்
 சிவசத்தி குருவடிவே சீர்பாதத்திருத்தாய் 34.

கருவாகிவந்து திருக்குரைகழல்காட்டிக்
கோதற்ற திருவருளாம் குறிப்புருவங்காட்டி
அருவாகியுயிர்தோறும் அடைந்தநிலைகாட்டி
ஆகமவேதாதிகலை யரும்பொருள்கள் காட்டி
மருவாமல்மலமாயை போக்கும்வழிகாட்டி
மாறாதபிறவியினி நாடாமல்வாட்டி
மருவாதபலபோகம் போக்கியருள்கூட்டி
மீளாதவகைகாட்டி ஆட்கொள்வாய்குருவே 35.

தத்துவங்கள் ஒவ்வொன்றாய்த் தெரிவித்துக்கழற்றித்
தத்துவங்கள் அகன்றஅறிவு உயிரென்றுதெரித்துத்
தத்துவங்கள் அகற்றியருள் வெளியிலணைவித்துத்
தத்துவமாய்த் தெரிவித்த தன்மையறிவித்துத்
தத்துவங்கள் நீக்கியுயிர் தன்னடியிற்சேர்த்த
தற்போதம் தோன்றாத தன்மையடைவித்துத்
தற்பதமாம் இன்பத்தில் திளைத்தென்றும் இருத்தும்
தற்பொருளாம்குருவே நின்தாளிணையில் வைப்பாய் 36.

சிவமாகிச் சிவபோகமாகி யருள்தோன்றும்
சிவயோகமாகியருட் சிவசோதியாகிச்
சிவமாகிச் சிவசத்தியாகி நிறைந்தெங்கும்
சிவனாதவிந்துசிவ சாதாக்கியமாகிச்
சிவமாதியைந்தான சிவரூபமாகிச்
சிவசத்தியேதனது சிவவடிவமாகும்
சிவரூபயோகசிவ சக்திகுருவடிவே
சிவபோகஞ்சித்திக்கச் சிவயோகத்திருத்தாய் 37.

அருளாகிஅருள்தெரிய ஆதிகுருவாகி
அருளாகுப் ஆகமங்களாகி அருட்கலையாய்
அருளாகித்தெரிவிக்கும் தத்துவங்களாகி
அருளாகிஆணவத்தி னிருள்நீக்கஒளியாய்
அருளாகிச்சுருதிகுரு சுவானுபவமாகி
அருளாகித்தோன்ற அகம்புறமும் ஒன்றாய் ஒளியாய்
அருளாகியாண்டன் பரகத்தென்றும் நீங்கா
அருட்குருவே அருள்சேர்த்துன்னடிமலரில் வைப்பாய். 38.

ஆனந்தத்தினிதிருக்க ஆனந்தஉருவாய்
ஆனந்தமாதிநடு முடியாகிவிளங்கும்
ஆனந்தசிவபோக அருள்வடிவமாகி
ஆனந்தமாகியருட் சித்தாகிச்சத்தாய்
ஆனந்தஉடலிலுறும் ஆருயிர்கட்கெல்லாம்
ஆனந்தஅருளமுத உணவாகிநீங்கா
ஆனந்தசிவனதருட் கருணைகுருவடிவாம்
ஆனந்தசிவமே யுன்னடிமலரில்வைப்பாய். 39.

பரபோகத்தினிதிருக்கப் பாலிக்குமருளே
பாலிலுறுநீராகிப் பார்க்குமிடமெங்கும்
பரபோதஅருளாகிப் பரிதியொளியாகிப்
பகுத்தறியாப்பண்பாகிப் பாவனைக்குமெட்டாப்
பரபோதமாகித்தில தயிலமணிநாதம்
பண்ணிசைநற் கண்ணினொளி நீரிரும்புமாகிப்
பரபோகம் பரபோதம்பிரியாதகுருவே
பரபோகம்பாலித்துப் பவங்கெடுப்பாய்குருவே. 40.

குருவே போற்றி குணமே போற்றி
அருவே போற்றி அறிவே போற்றி
திருவே போற்றி தெளிவே போற்றி
உருவே யுன்றனி ணையடி போற்றி 41.

வேதமே போற்றி விளைவே போற்றி
நாதனே போற்றி நண்பனே போற்றி
நீதனே போற்றி நிமலா போற்றி
போதனே நின்றன் பொன்னடி போற்றி 42.

அருளே போற்றி அருள்வாய் போற்றி
பொருளே போற்றி போகமே போற்றி
தெருளே போற்றி சிவமே போற்றி
மருளே தீர்த்த மலரடி போற்றி 43

ஆதியே போற்றி அரனே போற்றி
நீதியே போற்றி நிறைவே போற்றி
சோதியே போற்றி சுடரே போற்றி
ஓதியே நின்றனெ ளிரடி போற்றி 44.

தவமே போற்றி தனியே போற்றி
அவமே போகா தருளினை போற்றி
பவமே போகப் பணித்தாய் போற்றி
நவமே தந்த நற்பதம் போற்றி 45.

நற்பதம் தந்த நல் லருளே போற்றி
சொற்பதம் நீக்கும் சுடரே போற்றி
அற்புதமாய் வந்தருளினை போற்றி.
சிற்பதமாகும் சீரடி போற்றி 46

அருவா யென்னுள் ளறிவாய் போற்றி
குருவாய் வந்த குணமே போற்றி
ஒருவாய்மையினு லருளினை போற்றி
பிரியாவகை செய்பிரானே போற்றி 47

சத்தும் சித்தும் ஆனாய் போற்றி
நித்தம் சுத்தம் ஆயினை போற்றி
சித்தம் பக்தர்க் காம்நிழல் போற்றி
நித்தம் முத்தியில் வைப்பாய் போற்றி 48.

பாதம் தெரியாப்பரஞ்சுடர் போற்றி
நாதம் தானுய் நண்ணினை போற்றி
போதம் நீங்காப் புகலே போற்றி
பாதம் தந்து பணிப்பாய் போற்றி 49

ஓங்காரத்துள்ளுறவே போற்றி
ஓங்காரத்துள்ளுபிரே போற்றி
ஓங்காரத்துள் ளருளே போற்றி
ஓங்காரத்துள் வைப்பாய் போற்றி 50.

ஓம்

சிவசிவ போற்றி பவசய போற்றி
சிவசிவ போற்றி குருபர போற்றி
சிவசிவ போற்றி அருள்மயபோற்றி
சிவசிவ போற்றி சயசய போற்றி 51.

திருச்சிற்றம்பலம்.
குருவே நம:
குருவடி வாழ்க

## எந்நாட் கண்ணிகள்.

ஓங்காரத் துள்ளொளியே உன்கருணை வெள்ளத்தில்
நீங்காதிருந்து நிலைபெறு நாளெந்நாளோ 1.

அருவா யருவுருவாய் அகம் புறமுநீங்காத
உருவாய வுன்னடி சேர்ந்துவந்திருப்பதெந்நாளோ 2.

ஆதியுமாயனாதியுமாய் அன்பரகத் துள்ளொளியாய்
நீதியுமாய் நின்றவுன்னை நினைந்திருப்பதெந்நாளோ 3.

உருவாகி வந்தென்னு ளெந்தனிலே நின்ற
குருவேநின் குரைகழல்கள் கூடும் நாளெந்நாளோ

ஊனப்பிறவி யொழித் துன்கருணை வெள்ளத்தில்
வானெனப்பிலாதாய் நீ வைக்கும் நாளெந்நாளோ 5.

மண் பொன் பெண்ணாசை மயக்கிருளில் விழாமல்
என் பொன் மணியருளை யெய்துவிப்ப தெந்நாளோ 6.

இரவு பகலற்றொளி யாம் இடத்திலுனதருளை
உறைவிடமாய் நீங்காதுவந்திருப்பதெந்நாளோ 7.

ஈரமிலா நெஞ்சகத்திலிருவினையை நீக்கியருட்
பூரணத்தில் வைக்கப்புகுந்திடும் நாளெந்நாளோ 8.

பாசவிருள் துரந்தென் பற்றனைத்தும் நீக்கியருள்
வாசமுகமலர்ந்து அணைத்துவாவென்பதெந்நாளோ 9.

அல்லும் பகலும் அறிவழிந்து சோருவேனை
மெல்லவணைத் தருளில் மேவுவிப்பதெந்நாளோ 10.

ஆற்றிற் கரைத்த புளி யாகாது என்னறிவு
பேற்றைத் தருமடியில் பேணிவைப்ப தெந்நாளோ 11

பாலிலுறுநீர்போலப் பார்த்தவிட மெங்குமருட்
சோதியிலே நீங்காமல் துலங்க வைப்பதெந்நாளோ 12.

அங்குமிங்கும் பொறிவழியே யலைந்தசிறியேனை யருட்
பொங்கழலில்வைத்து அருளப்புகுந்திடுநா ளெந்நாளோ 13.

கொலைகளவுகட்காமம் குருநிந்தையாதிவினை
தினையளவுமில்லாமல் தீர்த்தருளலெந்நாளோ 14

நீர்க்குமிழியாமுடலை நீக்கவழி தேடுவேனை
பார்த்தருளில் வைத்துபயமறுத் தலெந்நாளோ 15.

கண்டார் நகைக்கக் கலங்கித்திரிவேனை யினி
திண்டோளணைத்தருளில் திளைத்துவைப்பதெந்நாளோ 16.

ஞேயத்தணைத்து நிலைபெறுத்திவைக்கவரும்
தாயொப்பிலாக்கருணை தந்திடுநா ளெந்நாளோ 17.

ஓவாதவான்கருணை உள்ளத்திலினி திருத்தி
வாவென்றணைத்தருளில் வைக்குநா ளெந்நாளோ 18.

அருவே அருவுருவே ஆதியே வேத
குருவே நின்குரைகழல்கள் கூடுநாளெந்நாளோ 19.

தஞ்சம்பிறிதின்றித் தனியாயலைவேனை
நெஞ்சத்திரங்கியருள் நீ சேர்த்தலெந்நாளோ 20.

வாழ்நாளை வீணாக்கி வழிதெரியாதலைவேனை
தாழாமல் தாளிணையில் தானிணைத்தலெந்நாளோ 21

புல்லறிவேன் தீமை பொறுத்தருளி லெஞ்ஞான்றும்
நில்லெனவே வங்கா நிலைநிறுக்க லெந்நாளோ 22.

தாயாகித் தந்தையாய்த் தமராகும் நின்கருணை
ஓயாதவெள்ளத்தில் ஒன்றவைப்பதெந்நாளோ 23.

ஒன்றாயிருதிறமா யோரைந்தா யையைந்தாய்
நின்றானே நின்னருளிலொன்றி நிற்பதெந்நாளோ 24.

சிவமே சிற்றம்பலமே சின்மயமே சித்தேயென்
தவமே நின்தாளிணையில் தானிருத்த லெந்நாளோ 25.

திருச்சிற்றம்பலம்.

குருவே நம

குருவடி வாழ்க.

முற்றிற்று.

சென்னை-600 068.